# இஸ்லாமிய சட்டவியலில் கூட்டு வக்ஃப் நடைமுறையும், தேர்வு செய்யப்பட்ட நாடுகளில் அதன் பிரயோகமும்: ஒரு கோட்பாட்டு ரீதியிலான பார்வை

# *Waqf-Al-Mushtarak* in Islamic Law and its application in Selected Countries in the World: A Theoretical Overview

M.R.J. Suhaima[1], A.J.M. Aslam[2] A.M.F. Sharmina[3] & I. Saujan[4]

[1,2,3&4]*Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka*

*zeenathulzuhaima8@gmail.com*

***ABSTRACT***

*Waqf is a form of permanent charity in the economy of an individual and it has been utilized for the betterment of needy people in a society. Moreover, it has played a significant role in economic development throughout Islamic history. Nowadays, joint waqf is becoming a popular contemporary waqf practice in Muslim majority countries in the world. It is seen as an important element that plays a huge role in the progress of Muslim society. The benefits of joint-waqf are distributed among the family or individuals or the public. It promotes maintaining family financial security and contributes to fulfilling the general needs of society. In this background, it is important to understand how joint-waqf worked with the compliance of Islamic Law. The aim of this paper was to examine the shari'ah view on the practice of Joint-Waqf in the contemporary world. This working paper adopted the interpretive qualitative analysis using past literature and analysed it from an Islamic perspective. According to the finding of the study that joint waqf is widely practised in Muslim-majority countries such as Malaysia, Indonesia, Morocco, Egypt and Saudi Arabia. also there are separate legal provisions in this regard. This study is important because it considers the concept of Islam related to Waqf and discusses the practical forms of joint Waqf and its operation.*

**Keywords:** *Joint-Waqf, Principle of Waqf in Islam, Waqf Al-Mushtharak, Continuing Charity*

**ஆய்வுச் சுருக்கம்**

ஒருவர் தனக்கு சொந்தமான அசையும் அல்லது அசையாச் சொத்தின் பயனை தனது விருப்பில் இஸ்லாம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப சமூகத்தின் தேவைக்காகவும் தனது குடும்பத்தின் தேவைக்காகவும் நிரந்தரமாகச் செலவிடும் பொருளாதார தர்மமே வக்ஃபாகும். சமகாலத்தில் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளில் பரவலாக கூட்டு வக்ஃப் ஆனது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தில் பாரிய பங்கு வகிக்கும் ஓர் முக்கிய மூலக்கூறாகக் காணப்படுகின்றது. கூட்டு வக்ஃப் சார் சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அல்லது பிரயோசனம் குடும்பம் அல்லது தனிநபர்கள் அல்லது பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இது குடும்ப நிதிப் பாதுகாப்பைப் பேண ஊக்குவிப்பதுடன் சமூகத்தின் பொதுவான தேவைகளை நிறைவேற்றுவதிலும் பங்களிப்புச் செய்கின்றது. அந்தவகையில் கூட்டு வக்ஃப் முறைமையானது இஸ்லாத்தில் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளது என்பதை மீளாய்வுக்கு உட்படுத்துவது அவசியமாகும். இது பண்புசார் முறையிலமைந்த ஒரு நூலக ஆய்வாகும். இவ்வாய்வுக்கான தரவுகள் நேரடியாக இஸ்லாமிய


ISBN: 978-624-5736-55-3

*சட்டவியல் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா போன்ற மூலங்களில் இருந்து பெறப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலை மூலங்களான ஆய்வுக் கட்டுரைகள், இணைய ஆக்கங்கள் போன்றனவும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகள் எழுத்துக்களிலும், சொற்களிலும் விபரண முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழும் நாடுகளான மலேசியா, இந்தோனேசியா, மொரோக்கோ, எகிப்து, சவுதி அரேபியா போன்ற நாடுகளில் கூட்டு வக்ஃபானது பரவலாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அது தொடர்பிலான தனியான சட்ட ஏற்பாடுகளும் காணப்படுகின்றன. இதன் நோக்கம் ஒரு மனிதன் தனது சொத்தில் தான் மாத்திரம் பயனடையாமல் அது சமூக நலன் சார்ந்து செல்ல வேண்டும் என்பதினாலாகும். இதனடிப்படையில் சொத்துக்கள் ஒருவரிடத்தில் தேங்கியிருக்காமல் பொருளாதார சுழற்சி முறைமை ஏற்படுத்தப்படுவதில் கூட்டு வக்ஃப் (வக்ஃப் அல் முஷ்தரக்) பாரிய பங்களிப்பினை செய்து வருகின்றமை இவ்வாய்வின் பிரதான கண்டறிதாலாகும். இவ்வாய்வானது வக்ஃப் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலையை பரிசீலித்து, கூட்டு வக்ஃபின் நடைமுறை வடிவங்கள் மற்றும் அதன் செயற்பாடு குறித்து கலந்துரையாடுவதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.*

***திறவுச் சொற்கள்**: கூட்டு-வக்ஃப், இஸ்லாத்தில் வக்ஃப் கோட்பாடு, வக்ஃப் அல்-முஷ்தரக், நிலையான தர்மம்*

---

### *1. அறிமுகம்*

*இஸ்லாமியப் பொருளாதாரம் இஸ்லாமிய அறிவின் ஒரு பகுதியாகவும், ஒரு புதிய சமூக அறிவியல் துறையாகவும் உருவெடுத்துள்ளது. இஸ்லாத்தின் மூல ஆவணங்கள் அதன் வளர்ச்சிக்கு பாரிய பங்களிப்பை வழங்கி வருகின்றன. சமூக நீதி, வறுமை ஒழிப்பு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளக் களைதல் மற்றும் ஊழலற்ற சமூகம் ஆகியவற்றை நிலைநாட்டுவதே இஸ்லாமிய பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகும் என்பதில் முஸ்லிம் பொருளாதார நிபுணர்கள் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர் (Azid, 2010).*

*இஸ்லாத்தில் வக்ஃப் ஒழுங்கு முறை (கோட்பாடு அல்லது நடைமுறை) என்பது ஒரு இலாப நோக்கமற்ற வழிமுறையாகக் கருதப்படுகின்றது. அல்லாஹ்வின்பால் நெருக்கத்தை ஏற்படுத்தும் நற்கருமங்களில் இதுவும் ஒன்றாகும். ஒருவர் தனக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையாச் சொத்தின் பயனை தனது விருப்பில் இஸ்லாம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஏற்ப சமூகத்தின் தேவைக்காகவும் தனது குடும்பத்தின் தேவைக்காகவும் நிரந்தரமாக செலவிடும் பொருளாதார தர்மமே வக்ஃபாகும் (Aashiq, 2019).*

*வக்ஃப் செயற்பாடு என்பது பொதுவாக ஆன்மீக மற்றும் பொருளாதார அமைப்புடன் தொடர்புடையதாகும். ஒரு பொருள் வக்ஃப் சொத்தாக மாறிவிடுமானால் குறித்த சொத்தைக் கொண்டு இஸ்லாம் அனுமதித்துள்ள அன்பளிப்பு வழங்கல், வாரிசுச் சொத்தாக்கப்படல், விற்பனை செய்தல், கடன் கொடுத்தல் போன்ற செயற்பாடுகள் தடைசெய்யப்பட்டவையாக மாறுகின்றன (Saujan & Mazahir, 2021).*

*இஸ்லாமிய வக்ஃப் நிறுவனமானது சமூகத்தில் நன்கு பரவியதாகவும் மனித சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு அடித்தளமாகவும் முஸ்லிம் பொருளாதார நிபுணர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. குறிப்பாக அடிப்படை தேவைகளை மக்களுக்கு வழங்கும் ஓர் அமைப்பிற்கான ஆதரவாகவும் ஓர் இலவச உட்கட்டமைப்பாகவும் காணப்படுகின்றது. இவ்வக்ஃப் தேசத்திற்கான மனித வளர்ச்சி மற்றும் சமத்துவத்தை வெளிக்கொண்டு வருவதற்கான உபாயமாகவும் காணப்படுகின்றது (Yalawe, 2009). மேலும் வக்ஃப் என்பது அல்லாஹ்வுக்காக என்ற தூய்மையான எண்ணத்துடன் செய்யப்படும் தர்மமாகும். இது நிலையான சமூக அபிவிருத்தியை வலுப்படுத்த முயல்வதுடன் இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கிடையிலான தொடர்பையும் பிரதிபலிக்கின்றது (Elasrag & Hussein, 2017). அந்தவகையில் இவ்வாய்வானது, வக்ஃப் இன் வகைகளில் ஒன்றான கூட்டு வக்ஃபின் நடைமுறை தொடர்பில் ஆராய முனைகிறது.*

## *2. ஆய்வின் நோக்கம்*

*1.கூட்டு வக்ஃப் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலையை பரிசீலித்தல்.*

*2.கூட்டு வக்பின் நடைமுறை வடிவங்கள் மற்றும் தேர்வு செய்யப்பட்ட நாடுகளில் குறித்த வக்ஃப் நடைமுறையை அடையாளப்படுத்தல்.*

## *3. ஆய்வு முறையியல்*

*பண்பு ரீதியிலமைந்த இவ்வாய்வானது முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை மையமாக கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு நூலக ஆய்வாகும். இவ்வாய்வுக்கான தரவுகள் நேரடியாக இஸ்லாமிய சட்டவியல் மூலாதாரங்களான அல்குர்ஆன், ஸுன்னா போன்ற மூலங்களில் இருந்து பெறப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக இரண்டாம் நிலை மூலங்களான ஆய்வுக் கட்டுரைகள், இணைய ஆக்கங்கள் போன்றனவும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகள் எழுத்துக்களிலும், சொற்களிலும் விபரண முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன.*

## *4. ஆய்வின் முக்கியத்துவம்*

*உலகளாவிய ரீதியில் முஸ்லிம் நாடுகளில் கூட்டு வக்ஃபின் அமுலாக்கம் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. கூட்டு வக்ஃப் முறைமையானது இஸ்லாத்தில் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளது என்பதை மீளாய்வுக்கு உட்படுத்துவது அவசியம் என்ற வகையில் வக்ஃப் தொடர்பான இஸ்லாத்தின் கருதுநிலையை பரிசீலித்து, அதன் நடைமுறை வடிவங்கள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடுவதால் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது. இவ்வாய்வானது இஸ்லாமிய பொருளாதாரம் தொடர்பாகவும் வக்ஃப் தொடர்பாகவும் மேற்கொள்ளப்படக் கூடிய ஆய்வுகளுக்கு உறுதுணையாக அமையவல்லது.*

## *5. இலக்கிய மீளாய்வு*

*“இஸ்லாத்தில் வக்பு ஒழுங்கும் இலங்கையில் அதன் நடைமுறையும்” எனும் தலைப்பில் A.M.Aashiq (2019) என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது இஸ்லாம் வறுமையை ஒழிப்பதற்காகவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஸகாத் வழங்கல், ஸதகா செய்தல்,*


ISBN: 978-624-5736-55-3

*அன்பளிப்பு வழங்கல், வஸிய்யத் செய்தல், வாரிசுரிமைப் பகிர்வு, குற்றப்பரிகாரம் வழங்கல், நஷ்டஈடு கொடுத்தல் மற்றும் கடன் வழங்குதல் போன்ற இன்னோரன்ன வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளது எனவும் அந்த முறைமைகளுள் வக்பு செய்தல் என்பது அதி முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் வக்பு பற்றிய அறிமுகம், இஸ்லாத்தில் அதன் சட்ட திட்டங்கள், அதற்கான ஆதாரங்கள், அவற்றின் வகைகள் மற்றும் அது தொடர்பான நவீன காலப் பிரச்சினைகளும், அவற்றிற்கான தீர்வுகள் பற்றியும் இலங்கையில் அதன் நடைமுறை எவ்வாறு காணப்படுகிறது, அதில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள் போன்றவற்றை இஸ்லாமிய ஷரீஆவின் பின்னணியில் இருந்து இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது. எனவே இவ்வாய்விலிருந்து தலைப்புடன் தொடர்பான விடயப்பரப்புக்குத் தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.*

*"Towards the Creation of Strong Brand Image of Waqf Institutions" எனும் தலைப்பில் S.I.Abdullahi (2021) என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் சமகாலத்தில் வக்ஃப் துறை எதிர்கொள்ளும் சவால்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் வக்ஃபின் பல நூற்றாண்டுகள் பழமையான நடைமுறைகள் மற்றும் மேலாண்மை நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ள இயலுமான அமைப்பில் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உலக நாடுகளில் கூட்டு வக்ஃப் நடைமுறையை மேம்படுத்துவது எவ்வாறு சாத்தியமாகும் என்பதையும் இவ்வாய்வு தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாய்வு ஆய்வு முறையியல், நோக்கம், தலைப்பு போன்ற விடயங்களில் வேறுபட்டுள்ள போதிலும் ஆய்வுடன் தொடர்புடைய சில தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.*

*"The Islamic Waqf: Instrument of Personal Security, Worldly and otherworldly" எனும் தலைப்பில் F.S.Adiguzel (2020) என்பவரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது மத்திய கிழக்கு, பால்கன் மற்றும் வட ஆப்பிரிக்கா நாடுகளில் பொருளாதார நிலையில் வக்ஃபின் பங்களிப்பு குறித்து ஆய்வு செய்யப்பட்டுது. கி.பி. 1500-1900 காலகட்டத்தை உள்ளடக்கிய காலப்பகுதிகளில் இஸ்தான்பூல் (ஒட்டோமான் தலைநகர்) மற்றும் கிழக்கு, மத்தியதரைக் கடலின் பொருளாதார நடவடிக்கைகளில் வக்ஃப் இன் பங்களிப்பு குறித்தும், மருத்துவமனைகள், கல்லூரிகள், கட்டடங்கள் ஆகியவற்றை நிறுவுவதில் வக்ஃப், முதன்மையாக திகழ்ந்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வு ஆய்வு முறையியல், நோக்கம், தலைப்பு போன்ற விடயங்களில் வேறுபட்டுள்ள போதிலும் ஆய்வுடன் தொடர்புடைய சில தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.*

*"Towards Improvement of The Rights and Duties of Mutawalli And Nazir in The Management And Administration of Waqf Assets" எனும் தலைப்பில் S.Asishah, R.A.Rashid (2015) ஆகியோரால் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையானது மலேசியாவில் முத்தவல்லி மற்றும் நசீரின் உரிமைகள் மற்றும் கடமைகள் தொடர்பான சிக்கல்களை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முஸ்லீம் சமூகத்தின் நன்மைகளுக்காக வக்ஃப் சொத்துக்கள் நிர்வகித்தல், பராமரித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு பொறுப்பானவர்கள் மலேசியாவில் ஒவ்வொரு மாநிலத்தின் இஸ்லாமிய மதக் கவுன்சிலிலும் நியமிக்கப்படுவதனால் அவர்களுக்கென காணப்படும் சட்டங்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாய்விலிருந்து ஆய்வுடன் தொடர்புடைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. குறித்த ஆய்வு இவ்வாய்விலிருந்து நோக்கம்,*

*ஆய்வுப்பரப்பு, தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, முறையியல் போன்ற விடயங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.*

*"Management of Waqf Properties : A Case Study In Srilanka" எனும் தலைப்பில் M.T.F.Bushra, S.M.M.Mazahir, M.M.A.Abdullah, S.M.M.Nafees ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு வக்ஃபு சொத்துக்களை நிர்வகிப்பதில் எழும் சவால்கள் மற்றும் பிரச்சினைகளை ஆராய்வதோடு வக்ஃபு சொத்துக்களை நிர்வகிப்பதில் ஏற்படுகின்ற குறைபாடுகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. இதில் போதிய திறமையான மனித வளமின்மை, வக்ஃபு சொத்துக்களை முறையாக பயன்படுத்தாமை, வக்ஃபு பற்றிய சமூகத்தின் விழிப்புணர்வின்மை என்பன குறைபாடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. வக்ஃபு சொத்துக்களின் முறையான நிர்வாகம் சமூகத்தின் அனைத்து தேவைகளையும் கணிசமான அளவிற்கு பூர்த்தி செய்ய போதுமானதாக இருக்கும் என்பது இவ்வாய்வின் முன்மொழிவாகும். இவ்வாய்விலிருந்து ஆய்வுடன் தொடர்புடைய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. குறித்த ஆய்வு இவ்வாய்விலிருந்து நோக்கம், ஆய்வுப்பரப்பு, தலைப்பு, ஆய்வுப்பிரச்சினை, முறையியல் போன்ற விடயங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.*

***6. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்***

*இஸ்லாமிய சட்டவியலில் கூட்டு வக்ஃப் நடைமுறையும், தேர்வு செய்யப்பட்ட நாடுகளில் அதன் பிரயோகமும்*

***1. வக்ஃப்: பொருள், வரைவிலக்கணம்***

*ஒரு மனிதன் கஷ்டப்பட்டு உழைக்கும் பொருளாதாரம் அவனுக்குப் பின் வரக்கூடிய சந்ததியினருக்கும் போய் சேர வேண்டும் என்பதற்காக இஸ்லாம் பல வழிமுறைகளை காட்டியுள்ளது. வாரிசு அல்லாதவர்களும் தனிமனித பொருளாதாரத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பதற்காக ஸகாத், ஸதகா, ஹிபத், வக்ஃப் போன்ற இன்னோரன்ன வழிமுறைகளை இங்கு குறிப்பிட முடியும். இவற்றின் மிக முக்கிய நோக்கம் தனி மனிதப் பொருளாதாரம் பொருளாதார சுழற்சி மூலம் ஏனைய மனிதர்களிடமும் சென்றடைய வேண்டும் என்பதாகும் (Saujan & Mazahir, 2021).*

*இம்முறைகளுள் வக்ஃப் செய்தல் என்பது அதி முக்கியத்துவம் பெறும் ஒன்றாகும்* (Aashiq, 2019). *இஸ்லாமிய வரலாறு முழுவதும் சமூக மேம்பாட்டினை வலுப்படுத்த இது பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடியும் (waqf Fund, 2022)."வக்ஃப்(الوقف)" என்ற அரபு மொழிச் சொல்லின் பன்மை சொல் "அவ்காஃப் (اوقاف)" என்பதாகும். இது "வகப (وقف)" என்ற அரபு வேர்ச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். இதன் நேரடிப் பொருள் தடுத்தல் அல்லது நிறுத்தி வைத்தல் என்பதாகும்.*

*அரபு முன்ஜித் அகராதி, வக்ஃப் என்ற சொல்லுக்கு "அல்லாஹ்வினுடைய பாதையில் (வக்ஃப் பீஸபீலில்லாஹ்) தடுத்து வைத்தல் அல்லது கட்டி வைத்தல்" என்ற பொருளைத் தருகின்றது (Goodreads, n.d.). மேலும் "ஹபஸ(حبس)" எனும் சொல்லுக்கு நிகராகவும் வக்ஃப் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இதன் பொருள் கட்டி வைத்தல் என்பதாகும் (Saujan, 2022; Aashiq, 2019). வக்ஃப் என்பது சட்டப்பூர்வ அர்த்தத்தில், "புனிதமான காரியத்திற்காக அல்லது தூய்மையான*

*எண்ணத்துடன் மத நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக குறிப்பிட்ட சொத்தின் ஒரு பகுதியை உருவாக்கிக் கொள்வதாகும்" (Balaji, 2019).*

*இமாம் அபூ யூசுப் இன் வரைவிலக்கணப்படி, வக்ப் என்பது மூன்று கூறுகளை உள்ளடக்கியது.*

*1. இறைவனின் உடைமை (Ownership of God)*

*2. மரணித்தவருக்கான சொத்தின் ஓர் உரிமை (The Extinction of The Founders Right)*

*3. மனித குலத்திற்கான நன்மை/ பலன் (The Benefits of Mankind) (Balaji, 2019)*

*மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வக்ஃப் என்பது பிரயோக மொழியில், "இஸ்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தூய நோக்கில் ஒரு மனிதன் தனது சொத்திலிருந்து ஒரு பகுதியை இறைவனுக்காக தடுத்து வைத்து அதன் பயனை சமூகத்துக்கும், தேவையுடையவர்களுக்கும் நன்கொடையாக வழங்கும் செயற்பாடாகும்" (Saujan, 2022).*

***2. வக்ஃபின் வகைகள்***

*வக்ஃப் அல் முஷ்தரக் குறித்து ஆராயும் முன்னர் வக்ஃப்பின் வகைகளை அறிவது அவசியமாகும். அந்த வகையில் பெரும்பான்மையான அறிஞர்களிடையே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைகளின் கீழ் பின்வருமாறு வக்ஃப் இன் வகைகளை நோக்க முடியும்.*

*• வக்ஃப் செய்யப்படும் பொருள் அல்லது வக்ஃப் செய்யப்படும் நோக்கத்தின் அடிப்படையில் வக்ஃப் ஆனது மூன்று வகைப்படும்.*

- *அல்-வக்ஃப் துர்ரி (الوقف الذري):- கொடையாளி தன் சந்ததியினர் மற்றும் தன் உறவினர்களுக்கு மத்தியில் தன் நன்கொடையை வழங்குதல்.*
- *அல்-வக்ஃப் ஹைரி (الوقف الخيري):- ஏழைகள், தேவையுடையோர்கள், வழிப்போக்கர்கள் மற்றும் பள்ளிவாயல், மருத்துவமனைகள், அனாதை இல்லங்களை அமைப்பதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு தனது சொத்தில் ஒரு பகுதியை வழங்குதல்.*
- *அல்-வக்ஃப் முஷ்தரக் (الوقف المشترك):- இரண்டு முறைகளினதும் சேர்க்கையாகும். அது ஒரே நேரத்தில் குடும்ப மற்றும் பொது நோக்கம் என்ற இரண்டு அடிப்படைகளிலும் வழங்கப்படும் (Maraje, 2009).*

*• வக்ஃப் செய்யும் மனிதர்கள் அல்லது வக்ஃப் செய்யப்படும் பொருளின் அடிப்படையில் இரண்டு வகைப்படும்.*

- *தனி நபர்களால் செய்யப்படும் வக்ஃப்.*
  *தலைவர்கள் அல்லது செல்வந்தர்களில் உள்ள சில தனிநபர்களினால் உருவாக்கிக் கொடுக்கப்படும் அல்லது வழங்கப்படும் வக்ஃப் வகை இதுவாகும். இது கூட்டாகவும் வழங்கப்படலாம்.*
- *ஒரு நாட்டின் பொருளாதார நிலை அடிப்படையில் வழங்கப்படும் வக்ஃப்.*
  *இதன் மூலம் விசாலமான வக்ஃப் இடம்பெறும். அதாவது கராஜ் வரி மூலம் அறவிடப்படும் பணம், நாட்டில் அறவிடப்படும் தண்டப்பணம், போரில் கிடைக்கப்பெற்ற கனீமத் பொருட்கள் மூலமாக இவ்வகையான வக்ஃப் வழங்கப்படும்.*


ISBN: 978-624-5736-55-3

• *வக்ஃப்பின் பயன் அல்லது நலனை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் வக்ஃப். இதன் செயற்பாடு இரண்டு வழிகளில் இடம்பெறும்.*


- *அல்-வக்ஃப் இஸ்திக்லாலி (الوقف الاستغلالي) :- இவ்வகை வக்பில் வியாபார நோக்கமோ அல்லது அதன் நேரடிப் பிரயோசனத்தை அடையும் நோக்கமோ இருத்தல் கூடாது.*
- *அல்-வக்ஃப் இஸ்திஸ்மாறி(الوقف استثماري) :- இவ்வகை வக்ஃப் ஆனது முதலீட்டை அடிப்படையாகக் கொண்டது. இங்கு வக்ஃப் செய்யப்படும் பொருளின் பெறுமதியில் 1/4 இன் மூலம் பிரயோசனத்தைப் பெறுவதாக அமைய வேண்டும்.*

*மேற்குறிப்பிட்ட இரண்டு வகை வக்ஃப்களும் பலதரப்பட்ட வியாபார முறைகளில் மேற்கொள்ளப்பட முடியும். அதாவது கைத்தொழில், விவசாயம், முஷாரகா, முழாரபா ஆகிய அடிப்படைகளில் மேற்கொள்ளப்படலாம். எனினும் இங்கு பெறப்படும் இலாபம் இறைவனின் பாதையில் செலவழிக்கப்பட வேண்டும் (Ziani, 2014).*

### *03. கூட்டு வக்ஃப் (الوقف المشترك)*

*குடும்ப நலன் மற்றும் பொது நலன் ஆகிய இரண்டினையும் ஒன்றிணைத்ததாக வழங்கப்படும் வக்ஃப் முறையே கூட்டு வக்ஃப் என அழைக்கப்படும். இதில் நன்கொடையாக ஒதுக்கப்படும் சொத்துக்கள் அல்லது நன்கொடை வழங்குனரின் (வாகிஃப்) எண்ணத்தின் அடிப்படையில் குடும்பம் அல்லது தொண்டு நிறுவனங்களுக்கு குறித்த வக்ஃப் வழங்கப்படும். எனவே இவ்வகை வக்ஃப் குடும்ப வக்ஃப் (வக்ஃப் துர்ரி) மற்றும் பொது நலன் சார் வக்ஃப் (வக்ஃப் கைரி) ஆகிய இரண்டினையும் ஒன்றிணைக்கும். இந்த வக்ஃப் சொத்துக்களில் இருந்து பெறப்படும் பயன்கள் அல்லது வருமானம் குடும்பம், சந்ததியினர் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பகிர்ந்து கொள்ளப்படும். இது பகிரப்பட்ட வக்ஃப் (Shared Waqf), இ கலப்பு வக்ஃப் (Mixed Waqf), ஒருங்கிணைந்த வக்ஃப் (Combined Waqf) என வேறு பெயர்களின் மூலமாகவும் அழைக்கப்படும் (Bakir> 2015).*

*இதன் செயற்பாட்டை அல்லது வடிவத்தை குறித்த வரைபடத்தின் மூலம் எடுத்து நோக்கலாம்.*



*(மேற்குறிப்பிட்ட கட்டமைப்பின் குறிகாட்டிகள் S.I.Abdullahi (2020) என்பவரால் "**Towards the Creation of Strong Brand Image of Waqf Institutions"** எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் இருந்து பெறப்பட்டது)*

*இதனடிப்படையில் குடும்ப வக்ஃப் (வக்ஃப் துர்ரி) ஆனது உறவினர்கள், சந்ததியினர்கள், சில தனிநபர்கள் மற்றும் அவர்களது சந்ததியினரின் நலனுக்காக பிற ஏழைகளுக்கு அதன் வருவாய் அல்லது பயனை நிறுத்தி நன்கொடையாளருக்குப் பின்னால் அவருடைய சந்ததியினரின் மூலம் (பிறருக்கு) உதவித் தொகையால் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்குவதை இது குறிக்கும். உதாரணமாக, இங்கு நன்கொடையாளரின் மரணத்தின் பின் சொத்தின் உரித்து ஒரு தொண்டு நிறுவனத்திற்கு மாற்றப்பட முடியும். இவ்வாறு மாற்றமடையும் செயற்பாடு சிவில் நன்கொடையாக கருதப்படும். இதன் பயன் குடும்பத்தையும், சமூகத்தையும் சார்ந்ததாக காணப்படும் (National endowment committee, 2016).*

*மேலும் பொது நன்கொடையானது (வக்ஃப் கைரி) ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுக்கு நன்கொடையின் வருவாயை அல்லது பயனைச் செலவிடுதல் அல்லது தொண்டு நிறுவனங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகளுக்கு வழங்குதல் ஆகும். அதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நற்செயல்களுக்காக இதன் பலன் கொண்டுபோய் சேர்க்கப்படும். மேலும் இதற்காக செலவிடப்படும் அனைத்தும் இறை பாதையில் (ஸதகதுல் ஜாரியா) ஓர் உயர்ந்த நிலையான தர்மமாகும்.*

*இவை இரண்டின் அடிப்படையிலும் உருவாகியதே கூட்டு வக்ஃப் ஆகும். இது குடும்ப வக்ஃப் ஆக ஆரம்பித்து பின் சந்ததியினரில் பயனடைபவர்களின் குறுக்கீட்டுக்கு அப்பால் அறக்கட்டளையாக மாறும். இதிலுள்ள பயன் சந்ததியினருக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. சட்ட சூழ்நிலையின் தோற்றத்திற்கு ஏற்ப சொத்து முழுவதும் வக்ஃப் முஷ்தரக் ஆகவே கருதப்படும். இந்த வக்ஃப் இனை விரிவுபடுத்தவும், பராமரிக்கவும், உறவினர்களிலிருந்து அதிகாரம் அளிக்கவும் இஸ்லாமிய சட்டத்தில் குறித்த சொத்துரிமையாளருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*2015 ஆம் ஆண்டில் ரியாத் தேசிய வக்ஃப் சபை (Natinoal Waqf Committee) இனால் சிரியா, பலஸ்தீன், இஸ்தான்ல் ஆகிய நாடுகளில் காணப்படும் பெரிய வக்ஃப்களில் 104 பிரிவுகளை உள்ளடக்கி வெளியிடப்பட்ட ஆய்வின்படி, ஆறு நூற்றாண்டுகளாக இந்த நாடுகளில் இருக்கும் வக்ஃப் சொத்துக்களில் 55% ஆனது (வக்ஃப் கைரி) பொதுவானதாகும். 25%ஆனது பரம்பரை (வக்ஃப் துர்ரி) வக்ஃப் ஆகும். இதில் 14%ஆனது கூட்டு வக்ஃப் (வக்ஃப் முஷ்தரக்) ஆகும்.*

*இதில் வக்ஃப் கைரி ஆனது வக்ஃப் முஷ்தரக் அடிப்படையில் வினியோகம் செய்யப்படும். இதில் 27% ஜும்மா பள்ளிவாயல்களுக்கும், 11% பல்கலைக்கழகங்களித்ற்கும், 8% பாதைகளுக்கும், 7% ஊர்க்காவல், 5% மக்கா மற்றும் மதீனாவிற்கும், 5% ஏழைகளுக்கும், 17% ஏனைய தேவைகளுக்காகவும் விநியோகிக்கப்படுகின்றது. இங்கு குடும்ப வக்ஃப் மற்றும் பொது நலனுக்கான வக்ஃப் ஆகியவற்றின் பிரயோசனம் ஃ வருமானம் கூட்டு வக்ஃப் ஆக மாற்றப்பட்டு சமூகத்தின் தேவைக்காக வழங்கப்படுகின்றது (National endowment committee, 2016).*


ISBN: 978-624-5736-55-3

*வக்ஃப் கைரி (பொது நலன் சார் வக்ஃப்) குறிப்பிட்ட காலத்திற்குப் பின் வக்ஃப் செய்தவர் அல்லது அவரின் பரம்பரை அல்லது உறவினர்களிடம் செல்லும். உதாரணமாக, வாகிப் "இந்த வீட்டை நான் ஏழைகள் அல்லது தேவையுடையவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கு வக்ஃப் செய்துவிட்டேன்" என்று நிபந்தனையிட்டுக் கூறுவார். பின் குறிப்பிட்ட காலத்தில் தன் பரம்பரைக்கு அல்லது அவர்களுக்குப் பின்னால் வரக்கூடிய பரம்பரைக்கு வக்ஃப் செய்வார். அது பொது நலன் சார் (வக்ஃப் கைரி) அடிப்படையில் இருக்கும். இங்கு பரம்பரை பரம்பரையாக அனைவரும் குறித்த வக்ஃபில் கூட்டு சேர்ந்து கொள்வார்கள். இதுவே வக்ஃப் அல் முஷ்தரக்கின் வடிவமாகும் (The Form of Waqf Al Mushtharak).*

*இந்த வகை உமர் (ரழி) அவர்களின் ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவர் கைபர் யுத்தத்தில் கிடைத்த பூமியை ஏழைகளுக்கும், நெருங்கிய உறவினர்களுக்கு ஸதகா செய்தார்கள். மேலும் அல்லாஹ்வின் பாதையில் இருப்பவர்கள், விருந்தாளிகள் வழிப்போக்கர்கள் அனைவருக்கும் அதனை வக்ஃப் ஆக ஆக்கினார்கள். இங்கு தனிநபருக்கு கிடைக்கப்பெற்ற சொத்தில் அனைவரும் கூட்டு சேர்ந்து கொள்கின்றமையை அவதானிக்கலாம் (Ziani, 2014)*

*மேலும் சொத்துரிமையாளரின் (வாகிஃப்) குறிப்பிட்ட தேவை அல்லது நோக்கத்தின் கீழ் வக்ஃப் சொத்தானது பல்வேறு பயன்களை அடைந்து கொண்டு பகிரப்படும். உதாரணமாக, ஊனமுற்ற ஒரு குழந்தையை பராமரிக்கும் பெற்றோர் எதிர்காலத்தில் சொத்து ரீதியான மோசடி ஏற்படக் கூடாது அல்லது சட்டவிரோதமாக பிறரால் குறித்த சொத்து கையகப்படுத்தப்படக் கூடாது என்பதற்காக சொத்துக்களை தனது குழந்தையின் எதிர்கால நலனுக்காக பாதுகாக்க விரும்புவர். எனினும் குறித்த அக்குழந்தை சொத்தின் உரிமையாளராக இருக்க மாட்டார்.*

*இங்கு வக்ஃப் பத்திரத்தின் உரிமையாளர் தனது நோக்கத்தை தெளிவாகக் கூறி அவர் சார்பாக சொத்தினை நிர்வகிக்க கூடிய ஒரு நபரை நியமிக்கலாம். இங்கு குறித்த சொத்தின் வடிவம் வக்ஃப் ஸ{ர்ரி (குடும்ப நல வக்ஃப்) ஆக இருக்கும். மேலும் பாதுகாப்பு நோக்கில் குறித்த சொத்தின் பயன் உரிமையாளரால் ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களுக்கு குறிப்பிட்ட காலம் வழங்கப்பட்டு (குறிப்பிட்ட காலத்தின்) பின் தன் குழந்தையின் தேவைக்கு மீட்டுக் கொள்ளப்படலாம். இங்கு வக்ஃப் ஸுர்ரி (குடும்ப நல வக்ஃப்) ஆனது வக்ஃப் கைரி (பொது நலன் சார் வக்ஃப்) உடன் இணைந்து செயற்படுகின்றது. அதாவது அடிப்படை நோக்கம் அல்லது தேவை அஹ்லியாக இருப்பினும் அது பொது நலனுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது (Mohamed, 2018).*

*மேலும் கூட்டு வக்ஃப் சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அல்லது பிரயோசனம் குடும்பம் அல்லது தனிநபர்கள் அல்லது பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இது குடும்ப நிதிப் பாதுகாப்பை பேண ஊக்குவிப்பதுடன் சமூகத்தின் பொதுவான தேவைகளை நிறைவேற்றுவதிலும் பங்களிப்பு செய்கின்றது.*

*கூட்டு வக்ஃப்பின் விதிமுறைகள் அல்லது நோக்கம் வக்ஃப் முஅக்கத் (தற்காலிக வக்ஃப்) வடிவத்திலே செய்யப்படும். மேலும் நன்கொடையாளரின் சொத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் சிறுவர்கள், குடும்ப உறுப்பினர்கள், அனாதைகளின் சொத்தில் இக்கட்டான நிலைகள் இருந்து அவை தீர்க்கப்பட்டால் மாத்திரமே அது பொது நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும்.*


ISBN: 978-624-5736-55-3

*இங்கு வாகிஃப் இரண்டு வெகுமதிகளை இறைவனிடத்தில் பெறுவார்.*

- *பொது மக்களுக்கு உதவியதற்கான வெகுமதி*
- *குடும்ப உறவைப் பேணியதற்கான (சிலதுர் ரஹிம்) வெகுமதி (Mohamed, 2018).*

***உலக நாடுகளில் கூட்டு வக்ஃபின் நடைமுறை***

*கூட்டு வக்ஃப் சார் சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அல்லது பிரயோசனம் குடும்பம் அல்லது தனிநபர்கள் அல்லது பொதுமக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. இது குடும்ப நிதிப் பாதுகாப்பைப் பேண ஊக்குவிப்பதுடன் சமூகத்தின் பொதுவான தேவைகளை நிறைவேற்றுவதிலும் பங்களிப்புச் செய்கின்றது. அந்தவகையில் கூட்டு வக்ஃப் முறைமையானது பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழும் நாடுகளில் பரவலாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அது தொடர்பிலான தனியான சட்ட ஏற்பாடுகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.*

***மலேசியா***

*மலேசியாவில் வக்ஃப் துறைக்கான சட்டவாக்கம் The Civil Law Act 1956, No.25 உருவாக்கப்பட்டது. இங்கு நம்பிக்கைக்குரிய வக்ஃப் சொத்துக்கள் அலுவல்களானது மத விவகார அமைச்சினையே குறித்து நிற்கிறது (Bushra, 2021). மலேசிய அரசாங்கம் "The Labuan International Business And Financial Centre Malaysia" என்ற அமைப்பை சர்வதேச வக்ஃப் அறக்கட்டளையாக 2015 ஆம் ஆண்டு நிறுவியது. அதில் தொண்டு வக்ஃப் (வக்ஃப் கைரி), குடும்ப வக்ப் (வக்ஃப் அஹ்லி), கூட்டு வக்ப் (வக்ஃப் அல்-முஷ்தரக்) மற்றும் சுய அர்ப்பணிப்பு வக்ஃப் (வக்ப் அல்-நஃப்ஸ்) ஆகிய முறைமைகளை மலேசியாவில் முஸ்லிம்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கும் நலனுக்கும் பயன்படுத்துகிறது. LIBF வக்ஃப் அமைப்பானது வக்ஃப் அஹ்லியை உருவாக்குவதற்கு ஊக்கமளிப்பதுடன் இஸ்லாமிய அறக்கட்டளையை முறையாக அறிமுகப்படுத்துவதன் மூலம் செல்வ மேலாண்மையை எளிதாக்குகிறது. மேலும் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் வக்ஃப் இன் பிரயோசனம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக பல்வேறு வழிமுறைகளை கையாண்டு வருகின்றது. இந்த அமைப்பானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்திகளை ஈர்ப்பதற்காக பல்வேறு வகையான வக்ஃப்களை அங்கீகரிக்கிறது.*




The Structure of LIWF

*(மேற்குறிப்பிட்ட LIWF இன் கட்டமைப்புக் குறிகாட்டிகள் N.A.Mohamad (2018) என்பவரால்* ***"A Study on The Socio-Economic Roles of Waqf Ahli (Family Waqf) In Promoting Family Security And A Sustainable Family Economy"*** *எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் இருந்து பெறப்பட்டது)*

**இந்தோனேஷியா**

*இந்தோனேசியாவின் தற்கால வக்ஃப் நடைமுறையானது வக்ஃப் நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்கும், அதிகமான கடைகள், மற்றும் அரிசி தொழிற்சாலைகள் போன்ற நலன்களுக்காகவும் பயன்படுத்துகின்றது. இங்கு தனிநபர்களது வக்ஃப் மற்றும் கூட்டு வக்ஃப் (பலர் இணைந்து உருவாக்கப்பட்ட வக்ஃப்) சொத்துக்கள் காணப்படுகின்றன* (Bushra, 2021). *தனி நபர்களும் இந்தோனேஷியாவின் வக்ஃப் சட்ட எண் 41 / 2004 இன் படி மத, சமூக நலனுக்காக மட்டுமன்றி சமூகப் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காகவும் வக்ஃப் பயன்படுத்தப்படுகின்றது.*

*இங்கு வக்ஃபின் நிதியைத் திரட்டும் நடவடிக்கையில் இஸ்லாமிய நிதி நிறுவனத்துடன் செல்வந்தர்களும், தனிநபர்களும் கூட்டிணைந்து கொள்வார்கள். வக்ஃப் ஹைரி மற்றும் வக்ஃப் துர்ரி ஆகிய இரண்டும் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் நெருங்கியதாகக் காணப்படும். வக்ஃப் ஹைரி ஆனது தனிநபர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல், கல்வியை வழங்குதல், தனிநபர் சுகாதாரத்தை மேம்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு பொது நலன் சார் வக்ஃபின் பிரயோசனமானது தனி நபர் நலன் பேணுதலிலும் பங்காற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது (Lita, 2021).*

**எகிப்து**

*எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவில் அமையப்பெற்றுள்ள அல் அஸ்ஹர் பல்கலைக்கழகமானது ஏனைய உலக நாடுகளில் வக்ஃப் நடைமுறையை விடவும் வளர்ச்சி கண்ட வக்ஃப் நிறுவனமாக காணப்படுகிறது. இந்த பல்கலைக்கழகமானது 1000 வருடங்கள் பழைமையானதாக பாரிய அளவிலான வக்ஃபு சொத்தைக் கொண்டுள்ளதாகவும் காணப்படுகின்றது மேலும் இந்த பல்கலைக்கழகம் ஒவ்வொரு வருடத்திலும் 1000 க்கும் அதிகமான உலகம் முழுவதுமான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க முடியுமான தகுதியை கொண்டுள்ளது (Yalawae, 2017).*

*1971 ஆம் ஆண்டில் எகிப்து அரசானது வக்ஃப் மன்றம் ஒன்றை நிறுவியது. இந்த நிறுவனத்தின் குறிக்கோளானது எகிப்திய சட்டம் No. 80 1971 இன் படி வக்ஃப் சொத்துக்களை கையாள்வதும், முன்னேற்றுவதுமாகும் (Bushra, 2021) மேலும் குடும்ப வக்ஃப் ஆவணத்தில் சகோதரர்கள், சகோதரிகள், அவர்களின் குழந்தைகள், மற்றும் நன்கொடையாளரின் குழந்தைகள் மேலும் உரிமை விடப்பட்ட அடிமைகள் ஆகியோர் இணைக்கப்படுவர். இங்கு நன்கொடையின் வருவாய் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்படும்.*

*இதன் மூலம் குடும்பமும், சமூகமும் பயனடைகின்றனர். மேற்குறிப்பிட்ட குடும்ப வக்ஃப் ஆனது மஸ்ஜிதுகள், பொது நீரூற்றுக்கள், குர்ஆன் மத்ரஸாக்கள் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டதாகவே காணப்படும். எனவே இங்கு குடும்ப வக்ஃப் (வக்ஃப் துர்ரி) பொது வக்ஃப் உடன் இணைக்கப்படுவதால் பரம்பரை பரம்பரையாக அனைவரும் கூட்டு வக்ஃபில் (வக்ஃப் முஷ்தரக்) இணைந்து கொள்ள முடிகின்றது (Bear, 1982).*


ISBN: 978-624-5736-55-3

**மொரோக்கோ**

*மொரோக்கோ சட்டத்தில், பிரிவு 23 இன் பிரகாரம் வக்ஃப் உதவித்தொகை நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ இருக்கலாம். இவ்வாறு நிரந்தரம் அல்லது தற்காலிகமாக இருப்பது ஒரு தனித்தன்மையாகும். அந்த வகையில், மொரோக்கோ வக்ஃப் குறியீட்டின் பிரிவு 108 ஆனது மொரோக்கோ உச்ச நீதிமன்றத்தில் 2004 ஆம் ஆண்டில் எண். 848 இன் படி உறுதி செய்யப்பட்டு நடைமுறைக்கு வந்தது.*

*மொரோக்கோ வக்ஃப் சட்டத்தின் அடிப்பையில் பிரிவு 108 ஆனது கூட்டு வக்ஃப் தொடர்பான நடைமுறைகளை உள்ளடக்கியுள்ளது. இதில் கூட்டு வக்ஃப் (வக்ப் முஷ்தரக்) என்பது வக்ஃப் ஹைரியை உள்ளடக்கும். அதாவது குறிப்பிட்ட வக்ஃப் ஆனது உரிமையாளரின் குழந்தை, சந்ததியினர், அல்லது பிறருக்கான நன்கொடையாக இருக்க முடியும். மேலும் இது பொது அமைப்பு சார்ந்து இருப்பின் குறித்த நபர் அல்லது அவரின் வாரிசுதாரருக்கு சொத்தின் உரிமை முழுமையாக தடை செய்யப்படும் என்று குறித்த பிரிவு குறிப்பிடுகின்றது (Encyclopedia of Law, n.d.).*

***சவூதி அரேபியா***

*சவூதி அரேபியாவிலே ஹிஜ்ரி 1386 ரஜப் 16 ஆம் திகதியன்று சட்ட இலக்கம் 574 மற்றும் ஹிஜ்ரி 1386 ரஜப் 18, அரச ஆணை இல. 35 என்பவற்றின் ஊடாக நன்கொடைவழங்கல் துறை ஒன்று சட்டரீதியாகத் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனமானது வக்ஃப் சொத்துக்களுக்கு பொறுப்பாகவும், வக்ஃப் சொத்துக்களை வினைத்திறனாக முகாமை செய்யவும் அமைக்கப்பட்டது. சவூதி அரேபியாவிலே ஹஜ் மற்றும் நன்கொடை அமைச்சினாலே இந்த நன்கொடை அமைச்சு நிறுவப்பட்டுள்ளது.*

*இங்கு ஹோட்டல்கள், நிலங்கள், கட்டிடங்கள், தங்குமிடங்கள், கடை, தோட்டம், வணக்கஸ்தலம் மற்றும் பல்வேறு விதமான வகையில் வக்ஃப் முறைகள் காணப்படுகின்றன. இங்கு மக்கா மற்றும் மதீனா போன்ற இரண்டு நகரங்களுக்கென விசேடமான நன்கொடைகளும் வக்ஃப் சொத்துக்களும் வேறுபடுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவை மஸ்ஜிதுல் ஹராம் மற்றும் மஸ்ஜிதுன் நபவி என்பவற்றுக்காகப் பிரயோகிக்கப்படுகிறன. இந்த நன்கொடை அல்லது வக்ஃப் முறையானது ஏனைய மத்திய கிழக்கு நாடுகளில் தேவையுடைய சமூகத்தாருக்கு விதிக்கப்பட்டுள்ளது (Bushra, 2021).*

***7. முடிவுரை (Conclusion)***

*இவ்வாய்வுக் கட்டுரையானது கூட்டு வக்ஃபின் நடைமுறை மற்றும் அதன் செயற்பாட்டு வடிவம் குறித்துக் கலந்துரையாடுகின்றது. அந்த வகையில் ஒவ்வொரு நாட்டிலும் கூட்டு வக்பினை முகாமை செய்வதற்காக பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் நோக்கம் ஒரு மனிதன் தனது சொத்தில் தான் மாத்திரம் பயனடையாமல் அது சமூக நலன் சார்ந்து செல்ல வேண்டும் என்பதினாலாகும். மேலும் சொத்துக்கள் ஒருவரிடத்தில் தேங்கியிருக்காமல் பொருளாதார சுழற்சி முறைமை ஏற்படுத்தப்படுவதில் கூட்டு வக்ஃப் (வக்ஃப் அல் முஷ்தரக்) பாரிய பங்களிப்பினை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கூட்டு வக்ஃப் ஆனது அல்லாஹ்வுக்காக என்ற தூய்மையான எண்ணத்துடன் செய்யப்படும் தர்மமாகும். இது நிலையான சமூக அபிவிருத்தியை வலுப்படுத்த முயல்கிறது. மேலும் இது இஸ்லாமிய நம்பிக்கை மற்றும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்கிடையிலான தொடர்பையும் பிரதிபலிக்கின்றது.*


ISBN: 978-624-5736-55-3

*எனவே வக்ஃப் துறையினுடைய அந்தஸ்தினையும், அது அல்லாஹ்வின் சொத்தாக கருதப்பட்டு அமானிதமாக பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும், முழு இஸ்லாமிய சமூகத்திற்கும் அதன் பிரயோசனம் சென்றடைய வேண்டும் என்பதற்குமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றைய வக்ஃப் துறையின் தேவைப்பாடாக காணப்படுகின்றது.*

## 8. References


Aashiq, A. M. (2019). *The Wakf System in Islam and its Application in Sri Lanka[Islathil waqf olungum ilangaiyil adhan nadaimuraiyum]* (Faculty of Islamic Studies,South Eastern University of Srilanka, Ed.). http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4013

Abdullahi, S. I. (2021). *Towards the Creation of Strong Brand Image of Waqf Institutions*. Sule Lamido University, Nigeria. https://doi.org/10.4018/978-1-7998-1245-6.ch004

Adiguzel, F. S. (2020). The Waqf, Instrument of personal security, worldly and otherworldly. *Duke University*. https://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://www.aeaweb.org/conference/2021/preliminary/paper/H5z8fNb2&ved=2ahUKEwjrppjC3fP3AhXfSmwGHfTyDDMQFnoECCEQAQ&usg=AOvVaw1-tNhWq-fZKM6-eS2MZarR

Albasha, O. (2022, February 6). *كيفية توزيع الوقف*. مفهرس. Retrieved 2022, from https://mufahras.com/%D9%83%D9%8A%D9%81%D9%8A%D8%A9-%D8%AA%D9%88%D8%B2%D9%8A%D8%B9-%D8%A7%D9%84%D9%88%D9%82%D9%81/

Asishah, S., & Rashid, R. A. (2015). *Towards Improvement Of The Rights And Duties Of Mutawalli And Nazir In The Management And Administration Of Waqf Assets*. international Islamic development, management conference, Malaysia. https://www.researchgate.net/publication/303406706_TOWARDS_IMPROVEMENT_OF_THE_RIGHTS_AND_DUTIES_OF_MUTAWALLI_AND_NAZIR_IN_THE_MANAGEMENT_AND_ADMINISTRATION_OF_WAQF_ASSETS

Bakir, M. M. (n.d.). *Islamic Finance | Waqf Mushtarak*. Islamic Finance. https://www.investment-and-finance.net/islamic-finance/w/waqf-mushtarak.html

Balaji, A. (2019, June 18). *Concept and Explanation of Waqf under Muslim Law*. iPleaders. Retrieved May 20, 2022, from https://blog.ipleaders.in/concept-waqf-muslim-law/?amp=1

Baqutayan, S. M. S., Ariffin, A. S., Mohsin, M. I. A., & Mahdzir, A. M. (2018). Waqf Between the Past and Present. *Mediterranean Journal of Social Sciences*, *9*(4), 149–155. https://doi.org/10.2478/mjss-2018-0124



ISBN: 978-624-5736-55-3

Bear, G. (1982). *THE WAQF AS A PROP FOR THE SOCIAL SYSTEM (SIXTEENTH-TWENTLETH CENTURIES)*. Jestor. Retrieved 2022, from http://www.jstor.org/action/showPublisher?publisherCode=bap.

Bushra, M. T. F. (2021). *Management of Waqf Properties:A study Based on Srilankan Context[waqf soththukkalai mugāmai seithal:ilangai sōlalai maiyapaduthiya āyvu]*. South Eastern University of Srilanka.

Cizakca, M. (n.d.). *The Origins of Waqf*. IslamicMarkets.Com. Retrieved May 25, 2022, from https://islamicmarkets.com/education/the-origins-of-waqf

Ibrahim, M., & Mokhtar, S. (2013, March 17). *Developing Waqf Land Through Joint Venture: Malaysia Experience*. Academia.Edu. Retrieved 2022, from https://www.academia.edu/3039437/Developing_Waqf_Land_Through_Joint_Venture_Malaysia_Experience

International Waqf Fund. (2022, March 28). *What is Waqf ? pay sadaqa online*. Retrieved May 25, 2022, from https://waqf.org/what-is-waqf/

*The Joint Waqf of IsDB and Bangladesh: Partnering to Establish a Landmark Institution with Long-Term Sustainability*. (n.d.). APIF. https://www.isdb.org/apif/joint-waqf-isdb-and-bangladesh-partnering-establish-landmark-institution-long-term-sustainability

Kamaruddin, M. I. H. (2018). *Waqf Management Practices: Case Study in a Malaysian Waqf Institution*. SSRN. Retrieved 2022, from https://papers.ssrn.com/sol3/papers.cfm?abstract_id=3269171

Kareem, A. (2021). *Law of Inheritance in Islam*. Darul Huda.

Khan, M. T. (2014). Historical Role of Islamic Waqf in Poverty Reduction in Muslim Society. *Pakistan Institution of Development Economics*, *54*(04), 979–996. https://www.jstor.org/stable/43831378?read-now=1&refreqid=excelsior%3A63cde6e7b8dd412ba706f1954f53c0a7&seq=8

Lita, H. N. (2021). Waqf And Economic Distribution Justice: Sustainable Poverty Alleviation Efforts. *Journal of Legal, Ethical and Regulatory Issues*. https://www.researchgate.net/publication/303406706_TOWARDS_IMPROVEMENT_OF_THE_RIGHTS_AND_DUTIES_OF_MUTAWALLI_AND_NAZIR_IN_THE_MANAGEMENT_AND_ADMINISTRATION_OF_WAQF_ASSETS

Ramees, U. K. (2021). *Wakf's role in solving economic problems[Porulāthāra pirachinaigalai thērpadhil waqfin pangu]*. Thinakaran. Retrieved 2022, from

https://www.thinakaran.lk/2022/01/21/%E0%AE%87%E0%AE%B8%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BE%E0

Saujan, I., & Mazahir, S. M. M. (2021). Legal and Practical Issues in the Management of Waqf Properties in Sri Lanka. *International Journal of Sukuk and Waqf Research*, *2*(1), 18–31. https://doi.org/10.46281/ijswr.v2il.1646

Saujan,I.(2022).Lecture 1,2: *Waqf In Islam[islaththin paarvaiyil waqf]*. Faculty of Islamic Studies, South Eastren University of Srilanka

Tirmidhi, J. (2020). *Islamic Understanding of Waqf* [Slides]. Slideserve. https://www.slideserve.com/Pat_Xavi/fiqh-islamic-jurisprudence#ad-pos

Verbit, G. P. (2002). Trust [E-book]. In *The Origin of the Trust* (pp. 141–142). Xlibris corporation.

*Waqf - ACJU*. (2022). ACJU.Lk. Retrieved 2022, from https://acju.lk/en/ief-services/waquf

*What is a joint Waqf?* (2021, January 28). iWaqf. https://www.iwaqf.net/what-is-a-joint-waqf/

Ziani, T. (2014, June 21). *أقسام الوقف وكيفية العمل به وبيان التوافق الفقهي في ذلك*. www.alukah.net. Retrieved 2022, from https://www.alukah.net/sharia/0/72446/%D8%A3%D9%82%D8%B3%D8%A7%D9%85-


ISBN: 978-624-5736-55-3